**செய்தி வெளியீடு எண்: 794** **நாள்: 23.11.2017**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 21.11.2017 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் மற்றும் உடுமலைப்பேட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 158 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 54 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள். மேலும், திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 148 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட 10 திட்டப்பணிகளை துவக்கி வைத்தார்கள்.

நகர்ப்புறங்களில் பெருகி வரும் மக்கட்தொகைக்கேற்ப குடிமைப் பணிகளை நிறைவேற்றிக் கொடுப்பது, அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வசதிகளை வழங்குவது உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய கடமைகளாகும். இத்தகைய பணிகளை மேற்கொள்ளும் உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலும், பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், திருப்பூர் மாவட்டம் குடிமங்கலம் ஒன்றியத்தைச் சார்ந்த 23 ஊராட்சிகளில் உள்ள 123 குடியிருப்புகளும், உடுமலைப்பேட்டை ஒன்றியத்தைச் சார்ந்த 3 ஊராட்சிகளில் உள்ள 35 குடியிருப்புகளும், என மொத்தம் 158 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் திருமூர்த்தி அணை, தளி வாய்க்காலை நீர் ஆதாரமாகக் கொண்டு 54 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக துவக்கி வைத்தார்கள். இந்த கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் சுமார் 1,23,000 மக்கள் பயனடைவார்கள்.

மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் ஒன்றியத்தைச் சார்ந்த குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 60 குடியிருப்புகள், 59 வழியோர குடியிருப்புகள் மற்றும் லால்பேட்டை பேரூராட்சி

ஆகிய பகுதிகளிலுள்ள சுமார் 60,000 மக்கள் பயன்பெறும் வகையில் 18 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்; நாமக்கல் மாவட்டம், பொத்தனூர் பேரூராட்சியில் உள்ள சுமார் 28,000 மக்கள் பயன்பெறும் வகையில்

6 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நகரக குடிநீர் அபிவிருத்தித் திட்டம்;

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் பகுதியில் உள்ள ஈஞ்சம்பாக்கத்தில் சுமார் 39,000 மக்கள் பயன்பெறும் வகையில் 22 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் வழங்கல் திட்டம்; ஆலந்தூர் பகுதியில் உள்ள நந்தம்பாக்கத்தில் சுமார் 8,000 மக்கள் பயன்பெறும் வகையில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் வழங்கல் திட்டம்; திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி புறவழி சாலை சந்திப்பிலிருந்து தாம்பரம் வரையிலான சென்னைக்கு தெற்கிலுள்ள பெருநகர உள்ளாட்சி பகுதிகளுக்கு 90 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 1200 மி.மி விட்டமுள்ள பிரதான குடிநீர் குழாய் பதிக்கும் திட்டம்;

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட ஜெ.ஜெ.நகர் (கிழக்கு) வெள்ளாளர் தெருவில் 1 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மங்கள் ஏரி பூங்கா; வளசரவாக்கம் மண்டலத்திற்குட்பட்ட நெற்குன்றம், காமராஜர் சாலையில் 1 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம்; காஞ்சிபுரம் மாவட்டம், பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட மடிப்பாக்கம், அம்பேத்கர் தெருவில் 79 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 188வது வார்டு அலுவலகம்; திருவள்ளூர் மாவட்டம், கொரட்டூர், கிழக்கு அவென்யூ சாலையில் 46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள டென்னிஸ் மைதானம்; ஜெ.ஜெ.நகர் (கிழக்கு), EB சாலையில் 1 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பூங்கா;

என மொத்தம் 202 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் நிறைவேற்றப்பட்டுள்ள 11 திட்டப்பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

மேலும், தமிழ்நாடு நகர்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் 2016–17ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத் தொகையான 1 கோடியே

**86** இலட்சத்து **12** ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.உடுமலை கே. ராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன் இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் முதன்மைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.சந்திரகாந்த் பி. காம்ப்ளே, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.சத்யபிரதா சாகு, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் சி.என்.மகேஸ்வரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – **9.**
நாள் : **23.11.2017**